(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறினுர்கள். அந்தப் பகுதியிலே வாழ்பவர்களில் ஏறத்தாழ 80 சதவீதம், 85 சதவீதம் விவசாயிகள் வாழ்கிறுர்கள். அங்கே பயிரிடப்படும் கரும்புகளை வெல்லமாகச் செய்ய அங்கேயே எந்த ஆலைக்கும் போக முடியவில்லை. பக்கத்திலுள்ள கள்ளக்குறிச்சி, ஆம்பூர் ஆலைகளுக்கோ அல்லது வேலூர் ஆலைக்கோ செல்ல வேண்டியிருக்கிறது. எங்கள் தொகுதியிலே உற்பத்தி செய்ய முடியாமலிருக்கிறது. எனவே எங்கள் தொகுதியிலுள்ள விவசாயிகளை உற்பத்தியாக்க அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிலங்களை இதுபோன்ற சர்க்கரை ஆலைக்கு ஒதுக்க வேளாண்மைத்துறை அமைச்சரிடத்தில் கேட்க வேண்டும்.

தோல், கொம்புகளை பயன்படுத்தும் தொழிற்சாலை

* 521வினு—திரு. பெ. செந்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாட்டில் தோல், கொம்பு முதலிய கச்சாப் பொருட்களைப் பயன் படுத்தி ஓர் தொழிற்சாலை அமைக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே தோல் மற்றும் கச்சாப்பொருட்கள் அதிகமாக ராணிப்பேட்டை போன்ற இடங்களில் இருப்பதாலும், தொழில்பேட்டை அமைக்க இடம் இருப்பதாலும் இங்கேயாவது அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை இயங்கிக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்களின் அடிப்படையில் சென்னையிலே இரண்டு தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதுபோன்ற பெரிய தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்ற ஒரு முயற்சியை தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளின் உதவியோடு முயற்சியெடுக்க வேண்டிய ஒரு திட்டமாகும்.

THIRU M A. LATHEEF : The largest number of tanneries are found at Vaniambadi. In view of the Minister's reply, may I know at least the possibility and feasibility of expansion of Governmently-run tanneries at Vinnamangalam? Will the Hon. Minister be pleased to state whether it can be expanded, so that it may be useful for the tanners in and around Vinnamangalam, Vaniambadi and Ambur?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தோல்பதனிடும் தொழிற்சாலையை மீண்டும் அரசாங்கத் தரப்பிலே தொடக்க இடம் இல்லை. நாம் தோலைப்பதனிட்டு பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

அதற்குப்பதில் இங்கேயே உற்பத்தி செய்யலாமா என்பதை அரசாங்கம் பரிசீலித்தது. அண்மையிலே பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டது. அவர்கள் சொல்வதெல்லாம், இங்கே உற்பத்தி செய்து அந்த நாட்டில் கப்பலிலே இறங்கும் பொழுது அங்கேயுள்ள டிசைன்ஸ் அண்ட் மார்க்கெட்டிங் நேச்சர் மாறிவிடுகிறது, எனவே தோலாகவே தாருங்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் புனராலோசனை செய்து வருகிறது.

கட்டடக் கற்கள் வெட்டி எடுக்க உரிமம்.

* 522 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடு கட்டுவதற்குத் தோண்டி எடுக்கப்படுகின்ற கருங்கல் (குவாரி) க்கு ரெவின்யூ இலாக்காவின் மூலம் வரி வசூலிக்கப்படுகின்றதா ?

(இ) ஆம் என்றால், எந்த அடிப்படையில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம். கட்டட கற்களையும் பிற சிறு கனிப்பொருள்களையும் வெட்டி எடுப்பதற்கு அனுமதியளிப்பதற்கும் அதற்கான உரிமைத்தொகை வசூலிப்பதற்கும் தமிழ்நாடு சிறுகனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959 விதி 3-ன்படி வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமத் தொகை தமிழ்நாடு சிறு கனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959-ல் பின் இணைப்பு இரண்டின்படி விதிக்கப்படுகிறது. இவ்வுரிமத் தொகை ஒரு வண்டி ஒழுங்கு படுத்தப்படாத கல்லுக்கு 25 பைசா வீதமும், உளியினால் சீராக்கப்பட்ட ஒரு வண்டி கல்லுக்கு 50 பைசா வீதமும் விதிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த குவாரியிங் ஸ்டோன்ஸ் விடுவது ஏலத்தில் விடப்படுகிறதா அல்லது அரசாங்கமே நிர்ணயம் செய்து விடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது புதிதாக இயற்றி இருக்கும் விதிகளின்படி விளம்பரம் செய்யப்பட்டு, யார் யார் மனுதாரர்கள் என்று பார்த்து ஒரு மனுதாரருக்கு மேல் இருக்குமானால் ஆக்ஷனில் விட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

செயற்கைப்பட்டு நூல் விநியோகம்

* 523 வினா—திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு செயற்கைப்பட்டு நூல்களை விநியோகம் செய்யும் முறை மண்டல தனியார் குழுவில் இருந்து வருவதை மாற்றி அரசாங்கம் நேரடியாக நெசவாளர்களுக்கு வழங்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) மேற்படி மண்டல கமிட்டி Regional Committee முறையான விநியோகம் செய்யவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) &(இ) ஆம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS